***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 389/2022 – P.W.5 (LW4)***

| | |
|---|---|
| *Name* | பக்கிரிசாமி |
| *Father/Husband's Name* | ஆறுமுகம் |
| *Village* | தலையாமங்கலம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *55* |

**எதிரி 1 ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.06.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர். அ.சா.1 குணசேகரையும் தெரியும். ஊர்க்காரர்தான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் வீட்டிலிருந்தபோது கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும், 05.10.2022ம் தேதியன்று பகல் 12.20 மணிக்கு நானும் வினோத்குமாரும் எங்கள் ஊரில் உள்ள பாலத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த தலையாமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினம் காலை குணசேகரன் குடும்பத்திற்கும் சௌந்தர்ராஜன் குடும்பத்திற்கும் நடந்த பிரச்சினை சம்மந்தமாக சம்பவ இடம் வந்து என் முன்னிலையிலும் வினோத்குமாரும் முன்னிலையிலும் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும் இதற்கு சாட்சியாக நான் இருந்து கையொப்பம் செய்துக்கொடுத்தேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல.

2. தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் -சரியல்ல.

**<u>எதிரி தரப்பில்</u> <u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.